பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

09 06 2025 **MONDAY** **12.40 PM**

தலைப்புச் செய்திகள்

1. தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் 11 ஆண்டுகால ஆட்சியில் பல்வேறு துறைகளில் நாடு விரைவான வளர்ச்சியை கண்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசின் 11 ஆண்டுகால ஆட்சி, மக்கள் சேவைக்கான அர்ப்பணிப்பு மற்றும் உறுதிப்பாட்டின் பொற்காலமாக திகழ்வதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

3. வளர்ச்சியடைந்த பாரதம் மற்றும் அமிர்தகாலம் ஆகியவற்றை செயல்படுத்தும் வகையில் அமைந்துள்ள மத்திய அரசின் நடவடிக்கைகள் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை என்று பிஜேபி தலைவர் திரு ஜெ பி நட்டா தெரிவித்துள்ளார்.

4. சத்தீஸ்கரில் மாவோயிஸ்டுகள் நடத்திய குண்டுவெடிப்பில் காவல்துறை அதிகாரி ஒருவர் உயிரிழந்தார்.

5. காஸாவுக்கு நிவாரணப்பொருட்கள் ஏற்றிசென்ற கப்பலை தடுத்து நிறுதிய இஸ்ரேல் ராணுவம் அதில் பயணித்த சர்வதேச செயல்பாட்டாளர்களை கைது செய்துள்ளது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் 11 ஆண்டுகால ஆட்சியில் பல்வேறு துறைகளில் நாடு விரைவான வளர்ச்சியை கண்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார

தமது சமூக வலைதள பக்கத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், 140 கோடி மக்களின் வாழ்த்து மற்றும் கூட்டு பங்களிப்பினால் இது சாத்தியமாகியுள்ளதாக கூறியுள்ளார்.

பொருளாதார வளர்ச்சி முதல் சமூக முன்னேற்றம் வரை அனைத்துத் தரப்பிலும் மக்கள் முன்னேற்றம் பெறுவதை நோக்கமாக கொண்டு மத்திய அரசு செயல்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலகில் பொருளாதார வளர்ச்சியை வேகமாக எட்டும் நாடாக மட்டுமல்லாமல், காலநிலை செயல்பாடுகள், டிஜிட்டல் கண்டுபிடிப்புகளில் முன்னெடுப்புகளை மேற்கொள்ளும் நாடாகவும் இந்தியா திகழ்வதாக பிரதமர் கூறியுள்ளார்.

அனைவருக்குமான வளர்ச்சி என்ற தாரக மந்திரத்தை செயல்படுத்தும் வகையில், துரிதமாகவும், மிகப்பெரியஅளவிலும் மாற்றங்களை மத்திய அரசு செயல்படுத்தி வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

நமோ செயலி வாயிலாக காணொலிகள், கட்டுரைகள் மற்றும் விளக்கப்படம் உள்ளிட்ட பல்வேறு முறைகள் வாயிலாக நாட்டின் வளர்ச்சி பயணத்தில் மக்கள் பங்கேற்க வேண்டும் என்று பிரதமர் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

முன்னெப்போதும் இல்லாத வகையில் அரசியல், சமூகம் மற்றும் பொருளாதாரத்தில் வளர்ச்சிக்கான மாற்றங்களை நாடு அடைந்துள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

தமது சமூக வலைதள பதிவில் இதனை தெரிவித்துள்ள அவர், பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையின்கீழ், கடந்த 11 ஆண்டுகளில் நாடு கண்டுள்ள மாற்றங்கள் சுதந்திரபபோராட்ட வீரர்கள் மற்றும் அரசியலமைப்பு சிற்பிகளின் கனவுகளை பிரதிபலிப்பதாக விளங்குகின்றன என்று கூறியுள்ளார்.

சுயசார்பு இந்தியா என்பதை செயல்படுத்தும் வகையில் நாட்டின் பாதுகாப்பு தளவாட உற்பத்தி அமைந்துள்ளதாக திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசின் 11 ஆண்டுகால ஆட்சி, மக்கள் சேவைக்கான அர்ப்பணிப்பு மற்றும் உறுதிப்பாட்டின் பொற்காலமாக திகழ்வதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

தேசிய பாதுகாப்பு, சமூக நீதி, பொருளாதார மறுமலர்ச்சி ஆகியவற்றி ல் புதிய யுகத்தை நாடு கண்டிருப்பதாக அவர் தமது சமூக வலைதள பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

தலைமை தீர்க்கமாக செயல்படும்போது நல்லாட்சி மலரும் என்பது தற்போது நிரூபனமாகியுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மூன்றாவது முறையாக பொறுப்பேற்றுள்ள பிரதமர் திரு நரேந்திர மோடியின் ஆட்சியில் அனைத்துத்துறைகளிலும் முதலிடம் பெறும் வகையில் நாடு கண்டுவரும் முன்னேற்றப்பயணம் தொடரும் என்று திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

வளர்ச்சியடைந்த பாரதம் மற்றும் அமிர்தகாலம் ஆகியவற்றை செயல்படுத்தும் வகையில் கடந்த 11 ஆண்டுகளாக பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை என்று பிஜேபி தலைவர் திரு ஜெ பி நட்டா தெரிவித்துள்ளார். புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனை குறிப்பிட்டார்.

<<<<>>>>

பகவான் பிர்சா முண்டாவின் 125-ஆவது நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

இதையொட்டி மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், சுதந்திரப்போராட்ட வீரராகவும், பழங்குடியின மக்களின் உரிமைகளுக்காக போராடியவராகவும் அவர் அடையாளம் காணப்படுவதாக தெரிவித்துள்ளார். பழங்குடியின சமூகத்தை சுயமரியாதை கொண்டதாக மாற்றியதில் அவரது பங்களிப்பு என்றென்றும் நினைவுகூரப்படும் என்று திரு அமித் ஷா புகழாரம் சூட்டியுள்ளார்.

<<<<>>>>

புதுச்சேரி சட்டப்பேரவை நடவடிக்கைகளை முழுமையாக டிஜிட்டல் மயமாக்குவதை தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் இன்று தொடங்கிவைத்தார். இந்நடவடிக்கை மூலம் சட்டப்பேரவை செயல்பாடுகள் வெளிப்படையாகவும், எளிதாகவும் அணுக வழிவகை ஏற்படும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

இனி . . .

மக்களின் மனதை வென்ற மத்திய அரசின் திட்டங்கள்.

**(Sound Byte – Music – 10 Sec)**

சேவை, நல்லாட்சி, ஏழைகளின் நலன் என்பதை தாரக மந்திரமாக கொண்டு கடந்த 11 ஆண்டுகளாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு செயல்பட்டு வருவதன் காரணமாக நாடு பெரிய அளவிலான மாற்றங்களை கண்டுள்ளது.

இதுதொடர்பான செய்தி தொகுப்பில் இன்று வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சிக்கான திட்டங்கள் இடம்பெறுகின்றன.

<<<<>>>>

சட்டீஸ்கரில் மாவோயிட்டுகள் நடத்திய குண்டுவெடிப்பில் காவல்துறை அதிகாரி ஒருவர் உயிரிழந்தார்.

சுக்மா மாவட்டத்தில் நாளை பந்த் நடைபெறுவதாக மாவோயிஸ்ட் அமைப்பு அறிவித்த நிலையில், இன்று காலை காவல்துறையினர் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

**'Konta – Errabor '**சாலையில் உள்ள **Dondra** கிராமம் அருகே மாவோயிஸ்டுகள் நடத்திய குண்டுவெடிப்பில் துணை கண்காணிப்பாளர் திரு ஆகாஷ் ராவ் **'Giritunje '** உயிரிழந்தார்.

இந்த குண்டுவெடிப்பில் காவல்துறையை சேர்ந்த சிலர் காயமடைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

மகாராஷ்ட்ராவில் இன்று நேரிட்ட ரயில் விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். ஏழு பேர் படுகாயமடைந்தனர்.

**Diwa – Mumbra** இடையேயான வழித்தடத்தில் சென்ற ரயிலில் அதிக அளவில் பயணிகள் ஏறியதால் கூட்ட நெரிசல் ஏற்பட்டதாகவும், படிக்கட்டில் பயணித்த நபர்கள் ரயில்வே தண்டவாளத்தில் தவறி விழுந்ததால் இவ்விபத்து நேரிட்டதாகவும் ரயில்வே அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விபத்து நேரிட்ட இடத்தில் தொடர்ந்து மீட்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் சட்டவிரோதமாக குடியேறியவர்களை கைது செய்ததற்கு எதிராக அங்கு மூன்றாவது நாளாக தொடர்ந்து போராட்டம் நடைபெற்று வருகிறது.

குடியேற்றம் மற்றும் சுங்கத்துறை அதிகாரிகள் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளை கண்டித்து பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில, லாஸ் ஏஞ்சல்ஸில் இயல்புநிலை திரும்ப அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு பாதுகாப்புத்துறை செயலாளர் மற்றும் அட்டானி ஜெனரல் ஆகியோருக்கு அதிபர் திரு டொனால்டு ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளார்.

***<<<<>>>>***

காஸாவுக்கு நிவாரணப்பொருட்கள் ஏற்றிசென்ற கப்பலை இடைமறித்த இஸ்ரேல் ராணுவம் அதில் பயணித்த சுற்றுச்சூழல் ஆர்வலர் **Greta Thunberg** உள்ளிட்ட சர்வதேச செயல்பாட்டாளர்கள் கைது செய்துள்ளது. இஸ்ரேல் கடல்பகுதி அருகே இவர்கள் பயணித்த **‘Madleen** கப்பல் வந்தபோது அந்நாட்டு ராணுவம் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டது.

பாலஸ்தீனத்தை சேர்ந்த தன்னார்வ அமைப்புடன் இணைந்து **Thunberg, ‘Rima Hassan’** உள்ளிட்ட சர்வதேச செயல்பாட்டாளர்கள் சென்ற இக்கப்பலானது காஸாவிலிருந்து 160 கிலோமீட்டர் தொலைவில் தடுத்து நிறுத்தப்பட்டதாக சர்வதேச செய்தி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

***<<<<END>>>>***